©
GOVERNMENT OF TAMIL NADU
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[Price : Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 31] CHENNAI, WEDNESDAY, AUGUST 12, 2009
Aadi 27, Thiruvalluvar Aandu–2040

# Part VI—Section 3(b)

**Notifications issued by Quasi-Government bodies and Public Sector Undertakings.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

## CONTENTS

*Pages.*

**தமிழ்நாடு மின்சார வாரியம்**

பொது நிர்மாண வட்டம், மதுரை .. .. .. .. 32-34

UNIVERSITY AUTHORITIES

**தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்**

தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டம் பிரிவு 18(எ) வகுப்பு–2(5)இன்கீழ் பேரவைத் தேர்தல் அறிவிப்பு .. .. .. .. .. .. 35

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**தமிழ்நாடு மின்சார வாரியம்**

**பொது நிர்மாண வட்டம், மதுரை**

**அறிவிக்கை**

*(Lr. No. SE/GCC/MDU/AEE/Moni/F.P.N./D.No. 491/09.)*

No. VI-3(b)/15/2009.

இவ்வறிவிக்கை பொது மக்களின் நலன் கருதி **2003**ஆம் ஆண்டின் மின்சார சட்டம் பிரிவு **185—**ன்கீழ் உட்பிரிவு **(2)** (a)-வின்படி ஏற்கெனவே தந்தி துறைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மின்சாரத்தை கொண்டு செல்ல **2003** ஆம் ஆண்டு மின்சார பிரிவு **164—**ன்கீழ் வாரியத்திற்கு இந்திய மின்சார சட்டத்தின்கீழ் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மாநிலம் மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களின் கூடுதல் மின்சுமையை நிறைவு செய்வதற்காக கீழ்க்கண்ட இடங்களில் புதிதாக துணை மின் நிலையம் அமைக்கவும், அவற்றோடு சேர்ந்த மின்பாதைகளையும் **2009—2010**ஆம் ஆண்டு மற்றும் வரும் ஆண்டுகளில் நிறுவுவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் அனுமதி பெறப்பட்டு உள்ளது.

| *வரிசை எண்.* *(1)* | *துணை மின்நிலையம் மற்றும் மின்பாதை.* *(2)* | *மின்பாதை நீளம்.* *(3)* | *மின்பாதை அழுத்தம்.* *(4)* | *மொத்த மதிப்பீடு (லட்சத்தில்)* *(5)* |
|---|---|---|---|---|
| 1 | **உதயாதூர்** 230/33 கி.வோ. காற்றாலை மின் நிலையத்தில் 1x 100 எம்.வி.ஏ. மின் மாற்றியுடன் 230/110 KV மின் அழுத்தம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. | — | 230/110 கி.வோ | 1228.56 |
| 2 | புதிதாக அமைக்கப்படவுள்ள **மேலப்பாளையம்** 110/33-11 கி.வோ. துணை மின் நிலையத்திற்கு **மேலக்கல்லூர்—கரந்தநேரி** 110 கி.வோ. மின்னூட்டியிலிருந்து உள்வெளி மின்பாதை அமைத்தல். | 18.0 | 110 கி.வோ | 938.67 |
| 3 | புதிதாக அமைக்கப்படவுள்ள **வண்ணிக்கோனேந்தல்** 230 கி.வோ. துணை மின்நிலையத்திலிருந்து பொது இடம் (Common Point) வரை 230 கி.வோ. இரட்டைச் சுற்று மின்பாதை அமைத்தல். | 17.0 | 230 கி.வோ | |
| 4 | பொது இடத்திலிருந்து (Common Point) வில்லிசேரி வரை 230 கி.வோ. ஒற்றைச் சுற்று மின்பாதை அமைத்தல். | 14.0 | 230 கி.வோ. | |
| 5 | பொது இடத்திலிருந்து (Common Point) **பன்னீர்குளம்** வரை 230 கி.வோ. ஒற்றைச் சுற்று மின்பாதை அமைத்தல். | 7.0 | 230 கி.வோ. | |
| 6 | **வண்ணிகோனேந்தல்** 230 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து பின்வரும் துணை மின் நிலையத்திற்கு 110 கி.வோ. ஒற்றைச் சுற்று மின்பாதை அமைத்தல். | — | | |
| | (1) வண்ணிகோனேந்தல் 110 கி.வோ. துணை மின் நிலையம். | — | 110 கி.வோ. | 6304.77 |
| | (2) சுந்தன்குறிச்சி 110 கி.வோ. துணை மின் நிலையம். | — | 110 கி.வோ. | |
| | (3) அய்யனார் ஊத்து 110 கி.வோ. துணை மின் நிலையம். | — | 110 கி.வோ. | |
| | (4) ஊத்துமலை 110 கி.வோ. துணை மின் நிலையம். | — | 110 கி.வோ. | |
| | (5) புதிதாக அமைக்கப்படவுள்ள தெற்கு வாகைகுளம் 110 கி.வோ. துணை மின் நிலையம். | — | 110 கி.வோ. | |
| | (6) குளித்துறை—மூஞ்சிரை 110 கி.வோ. மின் பாதையிலிருந்து புதிதாக அமைக்கப்படவுள்ள வண்ணிகோனேந்தல் 230 கி.வோ. துணை மின் நிலையத்திற்கு உள்வெளி மின்பாதை அமைத்தல். | — | 110 கி.வோ. | |

| *வரிசை எண்.* *(1)* | *துணை மின்நிலையம் மற்றும் மின்பாதை.* *(2)* | *மின்பாதை நீளம்.* *(3)* | *மின்பாதை அழுத்தம்.* *(4)* | *மொத்த மதிப்பீடு (லட்சத்தில்)* *(5)* |
|---|---|---|---|---|
| 7 | செக்கானூரணி–அமந்தாபுரம் 230 கி.வோ. மின்பாதையிலிருந்து **நல்லமநாயக்கன்பட்டி** 230/110 கி.வோ. துணை மின் நிலையத்திற்கு உள்வெளி மின்பாதை அமைத்தல். | 8.00 | 230 கி.வோ. | |
| 8 | **நல்லமநாயக்கன்பட்டி** துணை மின் நிலையத்திலிருந்து **தொட்டியபட்டி** துணை மின் நிலையத்திற்கு 110 கி.வோ. இரட்டைச்சுற்று மின் கோபுரத்தில் இரட்டைச் சுற்று மின்பாதை அமைத்தல். | 26.00 | 110 கி.வோ. | |
| 9 | **நல்லமநாயக்கன்பட்டி** துணை மின் நிலையத்திலிருந்து மின்கோபுரம் . இடம் A 110 கி.வோ. இரட்டைச்சுற்று மின் கோபுரத்தில் இரட்டைச் சுற்று மின்பாதை அமைத்தல். | 16.00 | 110 கி.வோ. | |
| 10 | மின்கோபுரம் இடம் A-விலிருந்து **ஆலங்குளம்** 110 கி.வோ. துணை மின் நிலையத்திற்கு இரட்டை சுற்று மின் கோபுரத்தில் ஒற்றைச் சுற்று மின் பாதை அமைத்தல். | 6.00 | 110 கி.வோ. | 6641.30 |
| 11 | மின்கோபுரம் இடம் A-விலிருந்து **ரெட்டியபட்டி** 110 கி.வோ. துணை மின் நிலையத்திற்கு இரட்டை சுற்று மின் கோபுரத்தில் ஒற்றைச் சுற்று மின் பாதை அமைத்தல். | 3.00 | 110 கி.வோ. | |
| 12 | **நல்லமநாயக்கன்பட்டி** துணை மின் நிலையத்திலிருந்து **விஸ்வநாதபேரி** 110 கி.வோ. துணை மின் நிலையம் வரை 110 கி.வோ. இரட்டைச்சுற்று மின் கோபுரத்தில் இரட்டைச்சுற்று மின்பாதை அமைத்தல். | 17.00 | 110. கி.வோ. | |
| 13 | **நல்லமநாயக்கன்பட்டி** துணை மின் நிலையத்திலிருந்து **இராஜபாளையம்** 110 கி.வோ. துணை மின் நிலையம் வரை 110 கி.வோ இரட்டைச்சுற்று மின் கோபுரத்தில் ஒற்றைச்சுற்று மின்பாதை அமைத்தல். | 9.00 | 110. கி.வோ. | |
| 14 | **விஸ்வநாதபேரி–நாரணாபுரம் புளியங்குடி,– கடையநல்லூர் விஸ்வநாதபேரி** துணை மின் நிலையத்திற்கு 110 கி.வோ. ஒற்றைச்சுற்று மின்பாதையிலிருக்கும் இரட்டைச் சுற்று மின் கோபுரத்தின் மற்றொரு பக்கம் கம்பி இழுத்தல். | 55.10 | 110 கி.வோ. | |
| 15 | திருமங்கலம் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் 110/33 கி.வோ. மின் மாற்றி அறிமுகப்படுத்தப்படவுள்ளது. | ஏதும் இல்லை | 110 கி.வோ | 489.44 |
| 16 | ஏற்கனவே உள்ள 110 கி.வோ. **உடுமலைபேட்டை–செம்பட்டி** மின்னூட்டி I வரை அமைந்துள்ள லெப்பர்டு மின் கடத்தியை மின்கோபுரம் இடம் 78–லிருந்து செம்பட்டி துணை மின் நிலையத்திற்கு பான்தர் மின் கடத்தியாக மாற்றி 110 கி.வோ. இரட்டைச்சுற்று மின் கோபுரத்தில் ஒற்றைச் சுற்றுமின்பாதை அமைத்தல். | 69.088 | 110 கி.வோ. | 2078.24 |

| *வரிசை எண்.* *(1)* | *துணை மின்நிலையம் மற்றும் மின்பாதை.* *(2)* | *மின்பாதை நீளம்.* *(3)* | *மின்பாதை அழுத்தம்.* *(4)* | *மொத்த மதிப்பீடு (லட்சத்தில்)* *(5)* |
|---|---|---|---|---|
| 17 | ஏற்கெனவே உள்ள **பெரியார்—சுருளியார் கயத்தார்** 110 கி.வோ. மின்பாதை கோபுர எண்கள் 172 முதல் 378 வரை உள்ள பழுதடைந்த 110 கி.வோ. மின் கம்பியை மாற்றி இரட்டைச் சுற்று மின்பாதை அமைத்தல். | 62.75 | 110 கி.வோ. | 1216.270 |
| 18 | ஏற்கெனவே உள்ள 110 கி.வோ. Wolf மின் கடத்தியாக உள்ள **பெரியார்—கயத்தார்** இரட்டைச் சுற்று மின் பாதையை (மின்கோபுரம் 95 முதல் 172 வரை) மற்றும் **இராஜபாளையம்** (மின்கோபுரம் 1 முதல் 17 வரை)110 கி.வோ. இரட்டைச்சுற்று பான்தர் மின்கடத்தியாக மாற்றுதல். | 28.18 | 110 கி.வோ. | 581.38 |
| 19 | ஏற்கெனவே உள்ள **சென்பகராமன் புதூர்** 230 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து **நாகர்கோவில்** 110 கி.வோ. துணை மின் நிலையம் வரை அமைந்துள்ள லெப்பர்டு மின்கடத்தியை பான்தர் மின் கடத்தியாக 110 கி.வோ. இரட்டை சுற்று மின் கோபுரத்தில் ஒற்றைச் சுற்று மின்பாதை அமைத்தல். | 10.99 | 110 கி.வோ. | 248.70 |
| 20 | ஏற்கெனவே உள்ள **கயத்தார்** 230 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து ஆறுமுகநேரி 110 கி.வோ. துணை மின் நிலையம் வரை 110 கி.வோ. ஒற்றைச்சுற்று மின்கோபுரத்தில் ஒற்றைச்சுற்று மின்பாதையிலுள்ள நாள்பட்ட லெப்பர்டு மின்கடத்தியை பான்தர் மின்டத்தியாக 110 கி.வோ. இரட்டைச் சுற்று மின்கோபுரத்தில் ஒற்றைச்சுற்று மின்பாதை அமைத்தல். | 51.53 | 110 கி.வோ. | 631.92 |
| 21 | **அனுப்பன்குளம்** 230 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து **துலுக்கப்பட்டி** 110 கி.வோ. துணை மின் நிலையத்திற்கு 110 கி.வோ. இரட்டைச்சுற்று மின்கோபுரத்தில் ஒற்றைச் சுற்று மின்பாதை அமைத்தல். | 22.0 | 110 கி.வோ. | 576.00 |

மேற்கூறப்பட்ட திட்டங்களில் உயர் அழுத்த மின்பாதை செல்லும் வழியில் ஏதேனும் முறையீடுகள் இருந்தால், விருப்பம் உள்ளவர்கள் இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் கீழே கையொப்பமிட்ட அதிகாரியிடம் 2003ஆம் ஆண்டின் மின்சாரம் சட்டப் பிரிவின்படி தெரிவிக்கவேண்டும்.

மதுரை—7,
2009 ஆகஸ்ட் 6.

**என். வெங்கடராமன்,**
*மேற்பார்வைப் பொறியாளர்,*
*பொது நிர்மாண வட்டம்.*

## UNIVERSITY AUTHORITIES

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டம் பிரிவு 18(எ) வகுப்பு–2 (5)இன்கீழ் பேரவைத் தேர்தல் அறிவிப்பு.**

*(ந.க.எண் 6680/சு/2009.)*

No. VI-3(b)/16/2009.

மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களிலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக்காலம் **3–10–2009** பிற்பகலுடன் முடிவுறுகிறது. இப்பேரவை உறுப்பினரின் பதவிக்காலம் மேலே குறிப்பிடப்பட்ட நாளில் முடிவுறுவதைத் தொடர்ந்து தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டம் பிரிவு 18(எ) வகுப்பு 2(5)இன்படி மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களிலிருந்து ஒருவரை, தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இவ்வுறுப்பினர் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளுக்கு அல்லது பேரவை மீண்டும் திருத்தி அமைக்கப்படும் நாள் வரை இவற்றில் எது முந்தியதோ அதுவரையாகும். தேவையெனில், இதற்காக நேரடியான மறைமுக வாக்குப்பதிவு நடைபெறும்.

ஒவ்வொரு மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினரும் பத்தி 1இல் நிர்ணயிக்கப்பட்டபடி தங்களுக்குள் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையில் வேட்பாளர்களை நியமனம் செய்யலாம். ஒவ்வொரு வேட்பு மனுவும் அதற்குரிய படிவத்தில் எழுத்து மூலமாகத் தேர்வாளரால் முன்மொழியப்பட்டு மற்றொரு தேர்வாளரால் வழிமொழியப்பட்டு அமையவேண்டும். ஒவ்வொரு வேட்புமனுவுடனும் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் பேரவையில் பணியாற்றுவதற்கு இசைவதாக வேட்பாளர் உறுதி மொழி கூறும் படிவத்தை நிறைவு செய்து கையொப்பம் இட்டு இணைத்தனுப்பவேண்டும்.

காலியிடங்களைப் பொறுத்து ஒவ்வொரு தேர்வாளரும் முன்மொழிபவராகவோ வழிமொழிபவராகவோ இருக்கலாம்.

ஒவ்வொரு வேட்புமனுவும் ஓர் உறையிலிடப்பட்டு அதன்மேல் "பேரவைக்கு மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களிலிருந்து வேட்பாளர் நியமனம்" என்று எழுதப்பட்டு ஒப்புகைச் சீட்டுடன் கூடிய பதிவு அஞ்சலில், "பதிவாளர் (பொ) மற்றும் தேர்தல் அலுவலர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613 010" என்னும் முகவரிக்கு 27–8–2009 பிற்பகல் 4.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும். வேட்பு மனுக்களை அலுவலக நேரத்தில் தேர்தல் அலுவலரான இப்பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) அவர்களிடம் நேரடியாகவோ நபர் மூலமாகவோ மேலே குறித்த காலத்திற்குள் கிடைக்குமாறும் அனுப்பிவைக்கலாம்.

மேலே கூறப்பட்டுள்ளபடி முறையாக அனுப்பப்படாத வேட்பு மனுக்கள் செல்லுடமையற்றவை எனச் சாற்றப்படும்.

வேட்பு மனுக்கள் 27–8–2009 மாலை 5.00 மணிக்குப் பல்கலைக்கழக அலுவலகத்தில் ஆய்வு செய்யப்படும். செல்லுடமையுள்ள வேட்பாளர் பட்டியல் அன்றைய நாளே வெளியிடப்படும்.

எந்த வேட்பாளரும் தம் வேட்பு மனுவை எழுத்து மூலம் அறிவித்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய திரும்பப் பெறும் அறிவிப்பை 3–9–2009 மாலை 3.00 மணிக்குள் கிடைக்குமாறு பதிவாளர் (பொ) மற்றும் தேர்தல் அலுவலர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613 010 என்ற முகவரிக்கு ஒப்புகைச் சீட்டுடன் கூடிய பதிவு அஞ்சலிலோ, மேலே குறித்த நாள் மற்றும் நேரத்திற்குள் தேர்தல் அலுவலரிடம் நேரடியாகவோ ஆள் மூலமாகவோ சேர்ப்பிக்கலாம்.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நேரம் முடிந்த பிறகு அன்றைய நாளே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். இறுதி வேட்பாளர் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களைவிடக் கூடுதலாக இருந்தால் 25–9–2009 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரையிலுள்ள இடைப்பட்ட நேரத்தில் மந்தண வாக்குப்பதிவு முறையில் தேர்தல் நடத்தப்படும்.

தஞ்சாவூர்,
2009 ஆகஸ்ட் 5.

**முனைவர் ஆ. கார்த்திகேயன்,**
*பதிவாளர் (பொ).*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

DTP—VI-3(b) (31)—2